[1992 மார்ச் 13

2. அறிக்கை அளித்தல்.

மனுக்கள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மனுக்கள் குழுவின் அறிக்கையை அளித்தல். மனுக்கள் குழுவின் தலைவர் திரு. கா. ப. பட்டாபிராமன்.

திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–92ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மனுக்கள் குழுவின் ஆறாவது அறிக்கையினை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

3. மானியக் கோரிக்கைகள், 1992–93, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 2—மாநில ஆயத்தீர்வைத் துறை—தொடர்ச்சி.

(ஆ) கோரிக்கை எண் 15—காவல் துறை—தொடர்ச்சி.

(இ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992-93ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும் வாக்கெடுப்பும் தொடர்ச்சி. திரு. எஸ். திருநாவுக்கரசு, இருக்கையில் இல்லை; திரு. ச. இராமச்சந்திரன் (குறுக்கீடு).

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்; நேற்றே உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்; என்னுடைய அறையிலேயும் சொல்லியிருக்கிறேன்.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியிலேயிருந்து . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து, உங்கள் கட்சியிலேயிருந்து என்பதல்ல; இன்று கட்சித் தலைவர்கள் பேசுகிறார்கள். நேற்றே, நீங்கள் விரும்பினால் பேசலாம் என்று உங்களுக்கு வாய்ப்பு கொடுத்தேன். அந்த வாய்ப்பை நழுவ விட்டு விட்டீர்கள்.